செ.வெ.எண்: 64 நாள்: 24.02.2017

## பத்திரிகைச்செய்தி

தமிழ்நாட்டின் மழை பொய்த்து விட்டதால் வறட்சியினால் கால்நடைகளுக்கு தீவனம் இன்றி கால்நடைகளை விவசாயிகள் விற்பனை செய்வதை தடுக்கும் பொருட்டு உலர் தீவனக் கிடங்குகள் அமைத்து செயல்படுத்திட தமிழக அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் வைக்கோல் தீவனத்தை மற்ற பயன்பாடுகளுக்கு பயன்படுத்துவதையும் பிற மாநிலங்களுக்கு எடுத்துக் செல்வதையும் தடை செய்து **"அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955"** என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டு செயல்படுகிறது.

எனவே, வைக்கோலை காளான் வளர்ப்புக்காகவும், தொழிற்சாலைகளில் பொருட்களை சேதமின்றி எடுத்துச் செல்லவும் உபயோகிக்க (Packing Materials) தடைசெய்யப்பட்டுள்ளது. வறட்சியிலிருந்து கால்நடைகளை காப்பாற்ற வைக்கோலை கால்நடைகளுக்கு மட்டும் தீவனமாக பயன்படுத்த வேண்டும். மற்ற பயன்பாட்டிற்கோ அல்லது பிற மாநிலங்களுக்கோ விற்பனை செய்து, கொண்டு செல்லவோ சட்ட விதிகளின்படி தடை செய்யப்படுகிறது. மீறி செயல்படுவோர் மீது **"அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955"**-இன்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் எச்சரித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**